## அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும்

# மெட்ரோ ரெயில் இயக்கப்படும் நேரம் நீட்டிப்பு

## பயணிகளின் கோரிக்கை ஏற்பு

சென்னை, நவ.10–
சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணியில் இருந்து இரவு 10 மணி வரை மட்டுமே ரெயில்களை இயக்கி வந்தது. இந்தநிலையில் பயணிகளின் கோரிக்கையை ஏற்று, இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் வரும் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 6 மணியில் இருந்து இரவு 11 மணி வரை மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படும் நேரம் நீட்டிக்கப்பட்டு உள்ளது. ஒவ்வொரு ரெயில் நிலையத்திலும் 7 நிமிடங்களுக்கு ஒரு ரெயில் வந்து செல்லும் வகையில் இயக்கப்படும். பயணிகள் முறையாக இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேற்கண்ட தகவலை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.